**திரு. நா. காசிராமன்:** இந்தச் சாலையை விரிவுபடுத்தும்போது சாலையின் இரு பக்கங்களிலும் உள்ள வீட்டுச் சொந்தக்காரர்களில் எவ்வளவு பேர் பாதிக்கப்படுவார்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்தச் சாலையை நிறுவும்போது வருகின்ற ஆட்சேபணைகளைக் குறித்துத்தான் எவ்வளவு பேர் என்று சொல்ல முடியும்.

**திரு. பி. வேலுசாமி:** இந்தச் சாலைகளை விரிவுபடுத்துவதற்கு என்று பிரத்தியேகமான கொள்கை உண்டா ? அதற்கான தகுதிகள் என்னென்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சாலைகளை விரிவுபடுத்துவதில் போக்குவரத்து ஒழுங்காக இருக்க வேண்டுமென்பதுதான் கொள்கை. அதற்காக முயற்சி எடுக்கப்படுகிறது.

**திரு. கோ. இரா. ஞானசம்பந்தன்:** நிதிவசதி வந்த பிறகு விரிவான திட்டமாக எடுத்துக் கொண்டாலும் போக்குவரத்து நெருக்கடி அதிகமாக இருக்கும் பகுதிகளில் தற்காலிகமாக ரோடுகளைச் செப்பனிடும் காரியத்தை எடுத்துக் கொள்வது பற்றி யோசிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவ்வப்போது பேணுதல் செலவு (மெயின்டனன்ஸ்) என்ற அடிப்படையில் அவை எல்லாம் கவனிக்கப்பட்டுதான் வருகின்றன.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் இவ்வளவு தூரம் கவனிக்கும்போது மற்ற மாவட்டங்கள் இந்த அளவுக்குக் கவனிக்கப்படுவது இல்லையே. . . . (மணி அடிக்கப்பட்டது)

(திரு. வி. கே. கோதண்டராமன் அழைக்கப்பட்டார்.)

**திரு. வி. கே. கோதண்டராமன்:** நாளுக்கு நாள் பஸ்ஸின் நீள அகலங்கள் அதிகமாகும்போது ரோடுகளின் அகலமும் அதிகமாகவேண்டுமென்ற முறையில் ரோடுகளை அகலப்படுத்தும் முயற்சியில் கவனம் செலுத்துவார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பஸ்களுக்குத் தகுந்தவாறு சாலைகளை அகலப்படுத்துவது இல்லை. போக்குவரத்துக்குத் தகுந்தவாறு, விபத்துக்களைத் தவிர்க்கும் வகையில், சுமுகமான போக்குவரத்து நடைபெறும் வகையில் சாலைகளை விரிவுபடுத்தும் முயற்சி நடைபெற்றுக் கொண்டுதான் வருகிறது.

### *Land Legislation*

* 122 *Q.*—THIRU S. RAMACHANDRAN: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether there is any proposal to bring a comprehensive land legislation ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Yes. The Government have under consideration a proposal to undertake a comprehensive tenancy legislation which will replace the following Tenancy Acts in force in the State :—

(1) The Madras Cultivating Tenants Protection Act, 1955 ;

(2) The Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 ;

(3) The Tanjore Pannaiyal Protection Act, 1952 ; and

(4) The Tiruchirappalli Kaieruvaram and Mattuvaram Act, 1958.

The legislation has not yet been finalised. Meanwhile, based on the decisions already arrived at , a draft tentative Bill called the Madras Agricultural Tenancy Bill has been drafted by the Law Department, and this Bill was examined in consultation with the Board of Revenue and the Director of Land Reforms, Planning Commission. The Bill is now being examined further.

Dr. H. V. HANDE : Sir, will this Government tell us the salient points in that proposed Bill and also, instead of allowing the whole thing to be examined by the Board of Revenue and other officials, whether this Government will take this House into their confidence and discuss the proposed Bill with the representatives of the various parties represented here first ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : This is only a a draft Bill which has been drafted by the Law Department. It has not reached such a stage where we can disclose the salient points of the Bill. After all, the Bill is being drafted. Definitely the Government will take this House into their confidence and it may even refer this Bill to the Select Committee or circulate it for eliciting public opinion.

Thiru K. VINAYAKAM : Sir, under the broad heading 'Land Legislation' the Land Ceiling Act comes. I want to know whether this Government has examined that this Act which was passed s me years ago, has been properly implemented and whether they have got supervisory powers to check malpractices. if any. Also, have any instances been brought to the notice of the Government that the landholders are not following the Land Ceiling Act ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : This House and the whole State are aware that the Land Ceiling Act is only a paper legislation. It has not produced the desired effect.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : முன்பு நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது இந்தச் சட்டம் இப்படி இப்படித்தான் இருக்கும் என்று வெளியில் பரவலாக அபிப்பிராயம் தெரிய வந்ததால் அந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ள பல பேர்கள் பல ஏற்பாடுகளைச் செய்து கொண்டார்கள் என்பதை ஞாபகத்தில் கொண்டு இனி கொண்டுவரப்படுகிற சட்டத்திலாவது அதுமாதிரி ஒரு சந்தர்ப்பம் கொடுக்காமல் இருக்க யோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முன்பு கொண்டு வரப்பட்ட சட்டத்தை நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது வர்ணித்தார்கள், உச்சவரம்புச் சட்டம் என்ற பெயரால் தொடங்கி அது மிச்சவரம்புச் சட்டமாக முடிந்துவிட்டது என்று. இப்போது வருகிற விரிவான சட்டத்தில் குடியானவர்களுடையவும், சாகுபடிதாரர்களுடையவும் நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்தச் சட்டம் தயாரிக்கப்படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : இப்படிப்பட்ட நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் எல்லா மந்திரிசபையையும், அதாவது எல்லோர் கண்ணையும் அது உறுத்திக் கொண்டிருக்கிறது. வோட்டு கிடைப்பதற்கு இது நல்ல வசதி

என்று. இருந்தபோதிலும் சில சட்டங்கள் அவசியந்தான். ஆனால் சிறு நில உடைமையாளர்கள், மூன்று ஏக்கர், அதற்குக் கீழ் நிலம் வைத்திருப்பவர்களுக்கு இப்படிப்பட்ட சட்டங்களிலிருந்து விதிவிலக்கு கொடுத்து அவர்களுக்கு தக்க நிவாரணம் அளிக்க இந்த சர்க்கார் முன்வருமா ? சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம், ∴பெயர் ரெண்ட் ஆக்ட் என்று இப்படியெல்லாம் இருக்கின்றன. பெரிய நிலச்சுவான்தார்களை மொங்கான் வைக்கட்டும். ஆனால் சிறிய நில உடைமையாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க இந்த சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த விவசாயச் சட்டத்தில் அடிப்படையான நடைமுறை அம்சம் ஒன்றுண்டு. நாட்டின் உற்பத்தி பெருக, உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற அவசியமாக இருக்கும் விவசாயிகள், குடியானவர்கள், நிலத்தில் பாடுபடுபவர்கள் இவர்களின் உரிமைகள் காக்கப்படவேண்டும் என்பதுதான் பிரதானமான நோக்கம். ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர்கள் வைத்திருப்பவர்கள்கூட மிராசுதார்கள் என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். நிலத்தில் வேலை செய்பவர்கள், குடியானவர்கள் இவர்களுக்கு பாதகமான நிலை ஏற்படாத வகையில் இந்த மசோதா கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த நிலச் சட்டத்தின் நகலை அதி விரைவில் பைனலைஸ் செய்து அடுத்த சட்டசபைக் கூட்டத் தொடரிலாவது கொண்டுவருவதற்கு அரசு முற்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எப்போது கொண்டுவரப்படும் என்பதுபற்றி நான் இப்போது உறுதி அளிக்கமுடியாது. ஆனால் பழைய அரசே இதை விரைவுபடுத்தியிருக்கலாம். விவசாய மக்களிடமும், உணவு உற்பத்திப் பெருக்கத்திலும் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு இருக்கிற புதிய அரசு இதற்கான எல்லாவிதக் காரியங்களிலும் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. எவ்வளவு விரைவில் கொண்டு வரமுடியுமோ அந்த அளவிற்கு முயற்சிக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். வரதராஜன் :** தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு முக்கியமான செய்தியை நம் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மிச்சவரம்புச் சட்டம் என்ற சட்டத்தை மாற்றி உண்மையான நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வர இந்த அமைச்சரவை முயற்சி எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்தார்கள். அது இன்று மிக அவசரமாக தமிழ்நாட்டு மக்கள் எதிர்பார்க்கக் கூடிய காரியம். ஆகவே எவ்வளவு விரைவில் அதை முடிக்க முடியும் என்று தெரிவித்தால் உதவியாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உறுப்பினர் அவர்களின் கேள்வியை நான் திருத்த விரும்புகிறேன். உச்சவரம்புச் சட்டத்தை நான் மிச்சவரம்புச் சட்டம் என்று குறிப்பிட்டது, ஏற்கனவே கொண்டுவரப்பட்ட நிலச்சீர்திருத்தச் சட்டத்தினால் தவறுகள் ஏற்பட்டு அதன் நோக்கமே தோற்கடிக்கப்பட்டது. அது ஒரு காகித மசோதா என்று குறிப்பிட்டேன். இப்போது முப்பது ஏக்கர் என்றிருக்கிறது. அதனால் சில ஆயிரம் ஏக்கர்கள் தான் கிடைக்கும். தமிழ்நாட்டில் உள்ள ஒரு பெரிய பிரச்னையை இப்போது கூறிக்கொள்ள விரும்புகிறேன். 3½ கோடி மக்கள் உள்ளதில் 60 லட்சம் பேர்கள்தான் பட்டாதாரர்களாக இருக்கிறார்கள். இரண்டு செண்ட், பத்து செண்ட் என்று வைத்துக்கொண்டிருப்பவர்களும் இருக்கிறார்கள். 45 லட்சம் மக்கள் புன்செய் பட்டாதாரர்கள், 15 லட்சம் அளவிற்கு நன்செய் பட்டாதாரர்கள் இருக்கிறார்கள். சில பெரிய நிலப்பிரபுக்கள் இதிலிருந்து தப்பித்துக்கொள்ள அந்நேரத்தில் உள்ள சூழ்நிலை வழி செய்துவிட்டது. இந்தச் சட்டத்தின் முக்கியமான அம்சம் என்னவெனில், குடியானவர்களுக்கு, சாகுபடிதாரர்களுக்கு, நிலத்தில் உறவு வைத்திருப்பவர்களுக்கு, இவர்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு, அவர்களுக்கு கடன் வாங்குவதற்கு வேண்டிய வசதிகள், அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றாமல் பாதுகாப்பது போன்றவையாகும்.

1968 மார்ச் 2]

திரு. க. இராமமூர்த்தி : இந்த நிலச்சட்டம் எந்த அடிப்படையில் என்னென்ன காரணங்களுக்காக கொண்டு வரப்படுகிறது ? இது எப்படிப் பட்ட விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் என்று கருதுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இவ்வளவு நேரம் அதைத்தான் சொன்னேன். நியாயவாரப்படி 60—40 என்றிருக்கிறது. இது ஒரு அம்சம். குடியானவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது என்பது—நியாயமாக விவசாயம் செய்யும் குடியானவர்களை ஏதேச்சாதிகார மாக காரணம் இல்லாமல் வெளியேற்றாமல் இருக்கவேண்டும் என்பது, நிலத்தில் சாகுபடி செய்கிற உரிமைகள் நிரந்தரமாகவும், வம்சாவழியில் கூட குடியானவர்களுக்கு வரவேண்டியது கடன் வாங்க வழி யில்லாமல் இருப்பதைத் தவிர்த்து அதற்கு வழி செய்து கொடுப்பது, உச்சவரம்புச் சட்டத்திலுள்ள கெடுதல்களை மீண்டும் பரிசிலனை செய்வது இப்படிப்பட்ட பல அம்சங்கள் உள்ளன. ப்ளானிங் கமிஷன் கூட சிபார்சு செய்திருக்கிறது, நிலச் சீர்திருத்தம் எப்படிச் செய்யப்படவேண்டுமென்று. ஆக, சாகுபடிதாரர்கள், குடியானவர்கள் இவர்களின் நியாயமான உரிமை களைப் பாதுகாக்க இந்தச் சட்டம் வழி செய்யும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: கோவில்கள், மடங்கள் இவற்றிற்கு சொந்தமான நிலங்கள் இந்த உச்சவரம்புச் சட்டத்திற்கு உட்பட்டுள்ளதா ? இல்லையென்றால் அதற்கான காரணங்கள் என்ன ? இனியாவது அந்த நிலங்களும் உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :கோவில் நிலங்கள் சம்பந்தமாக சில திட்டவட்டமான வரம்புகளை விதிக்கும் காரியங்களை இந்த அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. சரு. சீமைச்சாமி : சார், இப்போப்பட்ட நிலச் சீர்திருத்தங்கள் கொண்டுவருவதன் மூலம் உணவு உற்பத்தியில் புரட்சியை உண்டாக்க முடியுமா ? உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுவிடுமா எனபதை அறிய விரும்புகிறேன். மு. ப. 9–30

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் தமிழகம் வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். கடந்த ஆண்டிற்கு முந்தைய ஆண்டிலிருந்ததைவிட இந்த ஆண்டிலே 7 லட்சம் டன்கள் தமிழகத்திலே உணவு உற்பத்தி அதிகரித்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தவிர 3 இலட்சம் ஏக்கராக்கள் அளவிலே இருபோகமாக மாற்றியிருக்கிற புரட்சி நடந்துகொண்டிருக்கிறது. இந்தக் காரியங்கள் விவசாய மக்களுக்கும், குடியானவர்களுக்கும் மிகுந்த உற்சாகத்தை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

திரு. வி. டி. அண்ணாமலை : சார், தற்போதுள்ள நிலச்சீர்திருத்தச் சட்டத்தை நான் ஆதரிக்கின்றேன். இருந்தாலும் உணவு உற்பத்தியைப் பெருக்கும் காரணமாக நிலங்களை consolidation of holdings என்ற முறையிலே ஒருங்கு சேர்த்து டிராக்டர்களை அமைத்து, வேலிகளைச் சுற்றி அமைத்து, நல்ல விஞ்ஞானத் துறையில் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு பெரிய பண்ணைகளை அமைத்து உணவு உற்பத்தியைப் பெருக்கினால் அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு அரசினர் ஆதரவு அளிப்பார்களா, அவர் களுக்கு லைசென்ஸ் மூலம் "எக்ஸெம்ப்ஷன்" கொடுத்து காப்பாற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நல்ல கவர்ச்சிகரமான யோசனை. நான் ஏற்கனவே சொன்னேன். 60 இலட்சம் நில உரிமையாளர்களாகவும், பட்டாதாரர்களாகவும் உள்ளவர்கள் 20 செண்ட், 40 செண்ட் இருக்கிற அளவுக்கு அமைத்த கூட்டுறவுப் பண்ணைகள் சரியாக அமையவில்லை. தோற்று இருக்கிறது. தவிர எல்லோரும் மிராசுதார்கள் என்று சொல்ல முடியாது. குடியானவர்களும் இருக்கிறார்கள். எல்லோரும் வாங்கி சாப்பிடுகின்ற நிலையும் தமிழகத்தில் இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், வரப்போகும் நிலச் சீர்திருத்தத்தில் காட்டுவழியாக உள்ள இடங்களில் விவசாயத்திற்கு ஏற்பாடு செய்து விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு எல்லா வரிகளிலிருந்தும் வரிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தக் கேள்வி ஒரு நிர்வாக முறையைப் பற்றியிருக்கிறது. மசோதாவோடு தொடர்பு கொண்டதல்ல.

**திரு. சோ. அழகர்சாமி :** ஐயா, நிலச்சீர்திருத்தத்தில் காடுகள், மேய்ச்சல் தரைகள் ஆகியவற்றிற்கு விலக்கு உண்டு என்ற காரணத்தினால் பல நிலச்சுவான்தார்கள் சாகுபடிக்கு லாயக்குள்ள நிலங்களைக்கூட மேய்ச்சல் தரை, காடுகள் என்று கூறி விதிவிலக்கு பெறுகிறார்கள். அதை மாற்ற நிலச்சீர்திருத்தச் சட்டத்தில் அந்தத் திருத்தத்தை நீக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்தமாதிரியான எல்லா அம்சங்களையும் விரிவாக ஆராய்வதற்காகவும், நல்ல பல யோசனைகளை அறிவதற்காகவும் இந்த மசோதாவைப் பற்றிய கருத்துக்களைக் கூற இந்த மன்றத்திலுள்ள அங்கத்தினர்களுக்கு முழு உரிமையும், வாய்ப்பும் இருக்கிறது. அவர்கள் கூறுகின்ற எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு தான் இதன் கடைசி வடிவம் அமையும்.

### *Nurseries*

*123 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that Madras Forest Department has launched a scheme for establishing central nurseries where seedlings of useful trees will be raised and sold ; and

(*b*) if so, when and where they will be started ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) ஆம்.

(இ) 1966–67ல் மத்தியச் செடிப் பண்ணை ஒன்று சேலம் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ளது.

**திரு. கே. விநாயகம் :** சார், அப்படி நிறுவப்பட்ட மத்தியச் செடிப் பண்ணையிலே என்னென்ன செடிகள் உற்பத்தி செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன ? அதை இதுவரையில் எங்கெங்கு விநியோகம் செய்திருக்கிறார்கள் ? அப்படிச் செய்வதால் இந்தத் துறையிலே ஏதாவது நல்ல விளைச்சல் ஏற்பட்டிருக்கிறதா ? அதன் மூலம் என்ன லாபம் எதிர்பார்க்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** இந்தத் திட்டத்தின் கீழ் 6 ஏக்கர் நிலத்தில் 30 பாத்திகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே 6,000 மண் தொட்டிகளில் பயனுள்ள செடிகள வைக்கப்பட்டிருக்கின்றன. கரி, வேல், வேம்பு, புளி, மயில்கொன்றை போன்றவைகள் 11,000 பாத்திகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. பொதுமக்களுக்கு இன்னும் நாற்றுகள் விற்கப்படவில்லை.

**திரு. எம். எஸ். மணி :** தலைவரவர்களே, தமிழ்நாடு காடுகள் துறை துவங்கயுள்ள இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பண்ணையில் செடிகள் அமைப்பதற்கு இதுவரை செலவான தொகை மொத்தம் எவ்வளவு என அறியலாமா ?